## திறன் அபிவிருத்தி நிதியக் கம்பனி – 2017 / 2018

திறன் அபிவிருத்தி நிதியக் கம்பனியின் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத் தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2018 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் என்னால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படும் மீளாய்விற்கான ஆண்டில் கம்பெனியின் செயற்பாடுகள் தொடர்பிலான எனது அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிகூற்றுகளிற்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுகளை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காணரமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுப்பட்ட நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற உள்ளக கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுகளின்மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்கயர்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுகளிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்கயர்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுகளின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தனை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமரப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. பணிப்பாளர் சபையால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 2.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுகள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் 2.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மீதான விளைவுகள் தவிர்ந்த, நிதிக் கூற்றுகளில் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் திகதியில் திறன் அபிவிருத்தி நிதியக் கம்பனியின் நிதிசார் நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 2.1.1 ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் 163(2) பிரிவு பிரகாரம் என்னால் பின்வரும் விடயங்களை குறிப்பிடப்படுகிறது.

**(அ)** அபிப்பிராயத்திற்கான அடிப்படை, கணக்காய்வின் விடயவெல்லை மற்றும் மட்டும்படுத்தல்கள் மேற்படி காட்டப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) * இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவற்றிற்கான தாக்கங்களைத் தவித்து கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதெனவும், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் கம்பெனியால் முறையாக கணக்கீட்டு அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டுள்ளதெனவும்,

* கம்பெனியின் நிதி கூற்றுகள் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் 151 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள தேவைகள் என்பவற்றுக்கு இணங்குகின்றது என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 51 பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களில் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக ரூபா.5,485,778 ஆன நிலையான சொத்துக்களை முழுமையாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் மதிப்பிடப்பட்ட தொகையினை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 08 பிரகாரம் மீள்திருத்தம் செய்து செவ்வையான பெறுமதியினை நிதிசார் கூற்றுகளில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

--------------------------------------------------

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தில் பந்தி 9 "பி" படி ரூபா. 2,024,276 ஆன ஊழியர் கடனை நியாயமான பெறுமதிக்கு நிதிகூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை.

**2.2.2 கணக்காய்வற்கான சான்றுகளின்மை**

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பிற்போடப்பட்ட வரி ரூபா. 486,768 இற்கான உப அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றில் மூலதன மற்றும் ஒதுக்கத்தின்கீழ் (Capital and Reserves) ஏனைய ஒதுக்கமாக கடந்த சில ஆண்டுகளாக இருந்து வரும் ரூபா.297,303 ஆன புறம்பான மீதி இருந்ததுடன், இந்த மீதியை உறுதிப்படுத்துவதற்கான தகவல்களை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சிற்குரிய புலமைப் பிரிசில் நிதியத்தில் சொத்துக்களின் கணக்கில் ரூபா.4,065,489 ஆன மீதி நிலவியதுடன், பொறுப்புக் கணக்கில் ரூபா. 3,723,109 ஆன மீதி இருந்தபடியால் ரூபா.342,380 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், அதற்கான காரணம் கணக்காய்விடம் தெளிவுப்படுத்தப்படவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்காமை**

--------------------------------------------------------------------------------------------

**பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்** | **இணங்காமை** |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதி ஒழுங்குவிதி<br>(i) நிதி ஒழுங்குவிதி 188 | வங்கியில் பணம் வைப்புச் செய்கையில், கவனத்தில் கொள்ளத்தக்க காலப் பகுதிக்குள் பணம் வரவு வைக்கப்பட்டது என்பதற்கு வங்கியால் அறிவிக்கப்படாதவிடத்து, குறித்த காரணம் தொடர்பாக உடனடியாக புலனாய்வு செய்தல் வேண்டுமாயினும், ரூபா. 72,500 ஆன தீர்க்கப்படாத வைப்புகள் தொடர்பில் அவ்வாறு பணியாற்றியிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்குவிதி 225 | செலவுகளின் பொருட்டு வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட வவுச்சர் சமர்ப்பிப்பதற்கு பதிலாக பல செலவுகளின் பொருட்டு ஒரு வவுச்சர் தயாரிக்கப்பட்டு செலுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iii) நிதி ஒழுங்குவிதி 396 (ஈ) | காசோலை வழங்கிய திகதி, அதனை செல்லுபடியாக்கிய திகதி, ஆகிய இரண்டுகளில் பின்னராக வரும் திகதி தொடக்கம் 06 மாத |

| | |
|---|---|
| | காலப்பகுதிக்கு செலத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத பெறுமதி ரூபா. 388,713 ஆன காசோலை தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) - 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சிரேட்ட முகாமைத்துவ அலுவலரின் முன்அனுமதியின்றி கம்பெனியின் சாரதி மற்றும் அலுவலக பணியாளர் பதவிகளின் பொருட்டு ஒருவருக்கு ரூபா. 10,000 ஆன ஆகக்கூடிய உச்சவெல்லைக்கமைவாக மேலதிக படியாக 2017/2018 ஆண்டில் ரூபா. 962,495 செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2002 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தில் (திருத்தம் செய்த) 21(1) பிரிவு | 2017 ஆம் ஆண்டு மார்ச் 31 அந் திகதி மற்றும் யூன் 30 ஆந் திகதியல் முடிவடைந்த காலாண்டுகளில் பெறுமதி சேர் வரி அறிக்கைகளை வழங்குவதற்கு தவறியதன் காரணமாக ரூபா. 20,000 ஆன அபராதம் செலுத்த வேண்டி ஏற்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மற்றும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அந் திகதியில் முடிவடைந்த காலாண்டுக்காக அறிக்கை வழங்குதல் ஒழுங்குமுறையில் 27 நாட்கள் மற்றும் 11 நாட்கள் என்ற வகையில் தாமதிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) 2006 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள் (திருத்தம்) சட்டத்தில் 2(2) பிரிவு | காலாண்டுக்கான புரள்வு ரூபா 12.5 மில்லியன் விஞ்சின்றவுடன், பொருளாதார சேவைக் கட்டணங்களின் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும், 2017/2018 மதிப்பீட்டு ஆண்டில் காலாண்டுக்கான புரள்வு ரூபா 12.5 மில்லியன் விஞ்சியுள்ளவிடத்து அவ்வாறு பதிவு செய்வதற்கு பணியாற்றியிருக்கவில்லை. |
| (இ) 2008 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க முத்திரைக் கட்டணங்கள் (விசேட ஒதுக்கீட்டு) சட்டம் | கம்பெனி இந்த சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படவில்லையென்பதுடன், 2017/2018 ஆண்டுக்காக செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா.14,650 ஐ ஊழியர்களிடமிருந்து அறிவிடப்படவில்லை. |
| (ஈ) 2016 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (திருத்தம்) சட்டம் | காலாண்டுக்கான புரள்வு 3 மில்லியன் ரூபாவிற்கு அதிகமாகும்போது தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலுத்தப்பட வேண்டுமாயினும், 2017/2018 ஆண்டில் புரள்வு மீதான வரி செலுத்துவதற்கு கம்பெனி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்

2011 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆந் திகதிய DMS/E4/47/9/282/1 ஆம் இலக்க பொது திறைசேரி கடிதங்களின்படி வாழ்க்கைச் செலவுபடி தவிர்ந்த ஏனைய படி செலுத்தப்படாதிருத்தல் வேண்டுமாயினும், அதற்கு புறம்பாக கணக்கு ஆண்டில் ரூபா.3,281,271 தொகை ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுகள்படி , மீளாய்விற்கான ஆண்டில் கம்பெனியின் நிதிசார் விளைவு ரூபா. 6,544,228 ஆன வரிக்கு முன்னரான இலாபம் காணப்பட்டதுடன். அதற்கு எதிராக கடந்த ஆண்டில் வரிக்கு முன்னரான நட்டம் ரூபா.7,059,468 ஆகியதால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் நிதிசார் விளைவில் ரூபா. 13,603,696 ஆன வளர்ச்சி காணப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் வருமானம் முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா. 40,624,445 ஆல் அதிகரித்திருத்தல் அதற்கு பிரதான காரணமாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயலாற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்விற்கான ஆண்டில் திறன் அபிவிருத்தி நிதியக் கம்பெனியால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை, நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய எண்ணிக்கை மற்றும் இலக்காகக் கொண்ட / உறுதிப்படுத்திய வருமான நிலைமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்விற்கான ஆண்டில் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின்கீழ் 13 டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், அதில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறி மட்டும் நடாத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இந்த துறைகளில் உண்மையான வருமானம் ரூபா.775,000 ஆனதுடன், அது இலக்காகக் கொண்ட வருமானத்தில் 5 சதவீதமாகியது.

(ii) திறந்த துறையில் 164 நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு ரூபா.56,020,000 ஆன வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருப்பினும், ஆண்டில் 95 நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதில் உழைப்பு 41,182,500 ரூபாவாகும்.

(iii) ஆண்டில் அனுசரணை கோரிக்கைபடி 151 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு ரூபா. 11,695,000 ஆன வருமானம் உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், அதில் 142 நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்டிருந்தது.

(iv) ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட 328 நிகழ்ச்சித் திட்டங்களில் 15,215 அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு எதிர் பார்க்கப்பட்டிருப்பினும் 244 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 10,649 அலுவலர்களை மட்டும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதிய பீஈடி 01/2015 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றுநிருபம் பிரகாரம் கம்பெனியின் தலைவருக்கு உரிய மாதாந்த எரிபொருள் அளவு 170 லிற்றர் ஆயினும், 2011 ஆம் ஆண்டு பெப்ருவரி 09 ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கை ஏற்புடையதாகக் கொண்டு மாதமொன்றுக்க 225 லிற்றர் படி கணக்கு ஆண்டில் ரூபா. 36,575 தொகை அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதிய பீஈடி 02/2015 ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபம் படி தொலைபேசி கட்டண இரசீதுகளை மீளளிக்க முடியுமாயினும், அதற்கு புறம்பாக கம்பெனியின் இரண்டு அலுவலர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூபா. 10,000 மற்றும் ரூபா. 5,000 படி மொத்தம் ரூபா. 120,000 ஐ தொலைபேசி கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. அதே போன்று இக் கொடுப்பனவு பெற்றுக்கொள்வதற்காக வவுச்சருடன் தொலைபேசி கட்டண இரசீதுகளை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 ஏனைய அரச நிறுவனங்களிடம் வழங்கிய கம்பெனியின் வளங்கள்

2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்று நிருபத்தின் 9.4 பந்தி பிரகாரம் அமைச்சரவை அனுமதியின்றி அலுவலர் ஒருவர் பிரிதொரு நிறுவனத்திடம் அல்லது அமைச்சிடம் விடுவிக்கப்படுதலாகாத மற்றும் அந்த விடுவிக்கப்பட்ட காலப் பகுதியில் எதுவித கொடுப்பனவோ சம்பளமோ விடுவிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து செலுத்தப்படுதல் மேற்கொள்ளாதிருத்தல் வேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 18 அந் திகதியில் தலைவர் அவர்களின் கடிதம்படி கம்பெனியில் நிரந்தர சேவையில் உள்ள மூன்று அலுவலர்களை பாராளுமன்றத்தின் கடமைகளுக்காக அந்தக் கடிதத்தின் திகதி தொடக்கம் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த அலுவலர்களின் பொருட்டு ஆண்டில் சம்பளம் மற்றும் வேதனமாக ரூபா 801,861 செலுத்தப்பட்டிருந்தது.

4.4 **பணிற்றொகுதியின் நிருவாகம்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2011 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆந் திகதிய DMS/E4/47/9/282/1 மற்றும் 2014 ஆம் ஆண்டு செப்தெம்பர் 17 ஆந் திகதிய DMS/1676 ஆம் இலக்க கடிதங்கள் பிரகாரம் கம்பெனியின் பணிற்றொகுதி அனுமதிக்கப்பட்டிருப்பினும், அந்த எண்ணிக்கையையும் விஞ்சி 04 பதவிகளின் பொருட்டு 12 ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. அதில் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய 04 அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பபுச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 அந் திகதி DMS/E4/47/9/282/1 ஆம் இலக்க கடிதத்திற்கு முரணாக அந்தந்த பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்த திட்டத்தை அங்கீகரிக்கப்படாது 05 பதவிகளில் 05 அலுவலர்களை ஆட்செர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக கடந்த கணக்காய்வு உசாவுதலிலும் வலியுறுத்தப்பட்டிருக்கையில் 2017/2018 ஆண்டில் 04 அலுவலர்களின் பொருட்டு ரூபா 1,345,718 ஐ சம்பளம் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி இருக்க வேண்டிய தகைமைகளை பூர்த்தி செய்யதிருக்கையில் பொது முகாமையாளர் பதவிக்காக நிரந்தர அடிப்படையில் அலுவலரொருவரை ஆட்சேர்ப்புச் செய்யாமல் மாதாந்தம் ரூபா. 55,786 ஆன அடிப்படை சம்பளம் செலுத்தும் அடிப்படையின்மீது 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆந் திகதியில் 02 ஆண்டு காலப் பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. அதேபோன்று ஆட்சேர்ப்புச் செய்தலுக்கு ஏற்புடையதாக பிரசித்தி பெற்ற அறிவிப்புகளை வெளியிடுவதன்மூலம் விண்ணபங்களை கோருவதன் பின்னர் விண்ணப்பத்தாரிகளை தெரிவு செய்தல் வேண்டுமாயினும், மேற்படி அலுவலரை ஆட்சேர்ப்புச் செய்கையில் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) ஆண்டில் கம்பெனியிடம் பல்வேறு 05 பதவிகளுக்குரிய 08 அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்திருப்பினும், ஆட்சேர்ப்புத் திட்டம் படி அந்த அலுவலர்கள் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) ஆட்சேர்ப்புத் திட்டம் பிரகாரம் பிரதான நிறைவேற்று அலுவலரின் ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள்படி நிதியக் கம்பெனியின் அனைத்து கணக்குகள் மற்றும் நிதிசார் நடவடிக்கைகளை வழிநடாத்தல் கணக்காளர் பதவிக்கு கையளிக்கப்படும் கடமையாக இருப்பினும், 2016 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் 2017 ஆம் ஆண்டு செம்தெம்பர் 08 ஆந் திகதி வரை கம்பெனியின் கணக்காளராக பணியாற்றிய அலுவலரால் 2017 ஆம் ஆண்டுக்கு நிதி கூற்றுகளை தயாரிக்கும் பணியை தனியார் கணக்காய்வு நிறுவனத்திடம் வழங்கியிருந்ததுடன், ஆண்டுக்குள் அதற்காக ரூபா. 175,000 ஆன பணத் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நியமனக் கடிதம்படி எவரேனும் அலுவலர் ஒருவர் தமது விருப்பத்தின் பேரில் சேவையை முடிவுறுத்துவதாயின் அது தொடர்பாக 03 மாதங்களுக்கு முன்னர் நிறுவனத்திடம் அறிவித்தல் அல்லது அதன் பொருட்டு 03 மாதங்களுக்குரிய சம்பளத்தை செலுத்தப்பட வேண்டுமாயினும், முன்னாள் கணக்காளர் சேவையிலிருந்து விலகும் கடிதம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியான 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் 07 ஆந் திகதிக்கு பின்னரான திகதியிலிருந்து, அதாவது 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் 08 அந் திகதி தொடக்கம் சேவையிலிருந்து விலகியிருந்த

போதிலும், அந்த அலுவலரிடமிருந்து 03 மாத காலப்பகுதிக்கு அறவிட வேண்டிய சம்பளமான ரூபா. 150,492 அறவிடுவதற்கு கம்பெனி இதுவரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**4.5 வாகனங்களின் உபயோகம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மெற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்விற்கான ஆண்டில் வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் பேணுதல் நடவடிக்கைகளின் பொருட்டு கம்பெனியால் ரூபா. 671,861 ஆன தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையில் 3.4 பந்தி பிரகாரமும் பெறுகை கைந்நூலில் 2.14.1 பந்தி பிரகாரமும் வேலைகள் மற்றும் சேவைகளுக்கான பெறுகை நடைமுறை போட்டி நிலைமைக்கு உட்படுத்தி பொருத்தமான வழங்குநரை தெரிவு செய்தல் வேண்டுமாயினும், கம்பெனி வாகன பழுதுபார்த்தல் தொடர்பாக அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரமும் நிதி ஒழுங்குவிதி 756 (4) பிரகாரமும் கம்பெனிக்குரிய 302 – 1353 ஆம் இலக்க வாகனம் உபயோகப்படுத்தாது அகற்றப்பட வேண்டிய நிலையில் இருப்பினும், அது தொடர்பாக விசேட ஆய்வுச் சபை நியமனம் செய்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**5. நிலையான அபிவிருத்தி**

---

**5.1 நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளுதல்**

---

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க நிலையான அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கிய கடிதம் பிரகாரமும் நிலையான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரமும் ஒவ்வொரு அரச நிறுவனத்தாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக கம்பெனி தமது விடயவெல்லையின்கீழ் வருகின்ற பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்படல் வேண்டுமென அறிந்திருக்காமை காரணமாக நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்துக்கொள்ள வேண்டிய திருப்பங்கள், இலக்குகள் அண்மித்துக்கொள்வதனை அளவிடுவதற்கு சுட்டிகளை அடையாளம் காணுதல் என்பவற்றுக்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## 6. கணக்கீட்டு நெறிமுறைகள் மற்றும் நல்லாட்சி

### 6.1 கணக்காய்வு குழுக்கள்

2003 ஆம் ஆண்டு யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 இலக்க அரச தொழில்முயற்சி சுற்றுநிருபத்தின் 7.4.1 பந்தியின்படி கணக்காய்வு குழு கூட்டங்களை ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு முறையாவது நடாத்தப்பட வேண்டுமாயினும், கம்பெனி கணக்கு ஆண்டில் ஒரு கணக்காய்வு குழு கூட்டத்தை மட்டும் நடாத்தியிருந்தது.

### 6.2 பெறுகையும் ஒப்பந்த செயற்பாடும்

#### 6.2.1 ஒப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 6.2.2 அத்தியாயம் பிரகாரம் தேசிய போட்டியுடன்கூடிய முறைக்கு விலை கேள்விகள் கோருகின்றபோது ஆகக் குறைந்தது 21 நாட்களாவது வழங்க வேண்டுமென்பதுடன், கம்பெனி 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 03 மற்றும் 04 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட பெறுகை அறிவிப்பில் அந்த நாட்களின் எண்ணிக்கை 12 ஆக குறிப்பிடப்பட்டிருந்தமையால் மீண்டும் அந்த திகதிகளை திருத்தம் செய்து பத்திரிக்கை அறிவிப்புமூலம் வெளியிடுவதற்காக ரூபா.54,625 ஆன பயனற்ற செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) அந்த அத்தியாயத்தில் 6.2.1. படி விலை கணக்குகள் கோரும் காலவெல்லையானது, ஆற்றல் உள்ள விலை கேள்விகாரர்களுக்கு விலை கோரல் கடித ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கு முடியுமான திகதியிலிருந்து, இறுதி திகதி வரை இருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருப்பினும், கம்பெனி அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாது ஆவணங்களை கொள்முதல் செய்ய வேண்டிய திகதி 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆந் திகதி வரையிலும் கேள்வி கோரப்படும் இறதி திகதியான 2017 ஒக்தோபர் 23 வரையிலும் மட்டுப்படுத்தி அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) நிதியக் கம்பெனி 2017-2019 ஆண்டுக்காக இணைந்த திட்டம் தயாரிக்கும் பணியை, பெறுகை வழிகாட்டலை பின்பற்றாது நிறுவனத்தில் வெளியக நபரிடம் ரூபா. 250,000 தொகைக்கு வழங்கியிருந்தது.

### 6.3 செயற்றிட்டம் மற்றும் வரவு செலவு அட்டவணை

கம்பெனியின் கணக்கு ஆண்டு ஏப்பிரல் 01 ஆந் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த ஆண்டில் மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்தாலும், வரவு செலவு மதிப்பீடு மற்றும் செயற்றிட்டம் சனவரி 01 ஆந் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக அதன் நிதிசார் மற்றும் தொழிற்பாடுகள் என்பவற்றின் செயலாற்றுகையை மதிப்பிட முடியவில்லை.

## 6.4 வருடாந்த அறிக்கைகளை சபையில் சமர்ப்பித்தல்

---

2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றறிக்கையில் 6.5 பந்திபடி கணக்காய்வு அறிக்கையுடன் வருடாந்த இறுதி கணக்குகள் உள்ளடக்கிய வருடாந்த அறிக்கை மும்மொழியிலும் தயாரிக்கப்பட்டு நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கம்பெனியின் 2014/2015, 2015/2016 மற்றும் 2016/2017 கணக்கு ஆண்டுகளுக்கு அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் நிருவாக துறைகள்மீது விசேட கவனம் செலத்தப்படல் வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் நிருவாக துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (i) | கணக்கீடு | நாளேட்டுப் பதிவுகளை தயாரிப்பதற்கு செயலாற்றாமை, வருமானத்திற்கு ஏற்புடையதான இன்வொயிஸ்களை கணக்கீட்டு முறைமையுடன் சீராக்குவதற்கு இயலாமை. |
| (ii) | உள்ளக கட்டுப்பாடு | கணக்கீட்டு பிரிவில் உரிய வேலை பகிர்வு இல்லாமை |
| (iii) | மனித வளங்களின் முகாமைத்துவம் | பணியாற்றொகுதியை ஆட்சேர்ப்புச் செய்கையில் ஆட்சேர்ப்புத் திட்டம்படி நடவடிக்கை மேற்கொள்ளாமை |
| (iv) | வாகனங்களின் நிருவாகம் | ஓட்டக் குறிப்புகளை பேணிச் செல்லாமை, வாகனங்களின் பழுதுபார்த்தலுக்கு உரிய முறைமைகளை பின்பற்றப்படாமை |